RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22322

# கணியான் கூத்தில் தெய்வ வழிபாட்டுச் சூழல்

சோ. கிருஷ்ணமூர்த்தி [அ, *]

[அ] அரிய கையெழுத்துச் சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010, தமிழ்நாடு, இந்தியா

# Worship Environment in Kaniyan Koothu

S. Krishnamoorthy [a, *]

[a] Department of Rare Paper Manuscripts, Tamil University, Thanjavur–613010, Tamil Nadu, India

* Corresponding Author: krishnatamilbps@gmail.com

Received: 23-02-2022
Revised: 20-05-2022
Accepted: 29-05-2022
Published: 06-07-2022

**ABSTRACT**

People living in the countryside are the ones who preserve the cultural environment. Folk peoples and deities are indistinguishable. Storytelling has its place in folklore. These stories have been handed down orally for centuries by people living in the countryside and have been deeply ingrained in people's minds. Through various stories, different forms of worshipping the folk deities are clearly understood. The deity worship of the Kaniyan people is prominent in Southern Tamilnadu. The purpose of this article is to explore the elements of worship, the way of life of the people, and the socio-cultural changes through the use of Kaniyan Koothu Stories. This research paper was conducted from the psychological point of view that the worship of God is done to realize and fulfill the human needs based on the life of the folk people.

**Keywords:** Kaniyan Koothu, Deiva Vazhipadu, Folk Culture, Sudalai Madan, Esakkiamman

## முன்னுரை

நாட்டார் வழக்காற்றியலில் கதைப்பாடல்களுக்கெனத் தனியிடம் ஒன்றுண்டு. இந்தக் கதைப்பாடல்கள் நாட்டுப்புறங்களில் வாழும் மக்களால் வாய்மொழியாகப் பல நூற்றாண்டுகள் வழங்கப்பட்டு மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்தவை. பல்வேறு கதைப்பாடல்களின்வழி நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு எவ்வாறெல்லாம் நிகழ்ந்தன என்பதைத் தெள்ளிதின் அறிய முடிகிறது. மேலும், தென்தமிழகத்தில் வழங்கப்படும் கணியான் கூத்துக் கதைப்பாடல்கள் எல்லாம் அச்சமூகச் சடங்குச் சூழலையும் தெய்வ வழிபாட்டுச் சூழலையும் உள்ளடக்கியதாக மக்களோடு மக்களாகக் கலந்தவையாகக் காணப்படுகின்றன.

## கணியான் கூத்து

திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி போன்ற தென்தமிழக மாவட்டங்களில் கணியான் இனமக்களால் நிகழ்த்தப்பெறும் ஒரு கலை வடிவமே கணியான்கூத்து ஆகும். நாட்டுப்புறத் தெய்வங்களான சுடலை மாடன், இசக்கி அம்மன் தெய்வ வழிபாட்டுச் சடங்குகளில் இக்கணியான் கூத்து நிகழ்த்தப்படுகிறது. கணியான் கூத்திற்கு 'மகுட இசை' மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுவதால் கணியான் கூத்தை 'மகுட ஆட்டம்' என்று கூறும் வழக்கமும் உள்ளது.

## கதைப்பாடல்கள்

கதைப்பாடல் என்பது வாய்மொழி இலக்கிய வழக்காறுகளுள் ஒன்று. மேலும், கதைப்பாடல் என்பது ஒரு கதையைப் பாடலாகப் பாடுவது என்று பொருள் படுகிறது. அவ்வாறு கதையைப் பாடலாகப் பாடுவது அனைத்தும் கதைப்பாடல்கள் என்று நாம் கூறிவிட இயலாது. ஏனெனில் சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்றவை கதைகளைத்தான் பாடல்வடிவில் எடுத்தியம்புகின்றன. இவற்றை நாம் காப்பியங்கள் என்று நாம் வழங்குகிறோம்.

"கதையைப் பாடலாகக் கூறுவது அல்லது பாடலில் கதை பொதிந்து வருவது கதைப்பாடல் என்று அழைக்கப்படுகிறது. இது ஒரே ஒரு கதையைப் பற்றியதாகவும் இருக்கலாம் அல்லது உட்கதைகள் பல கொண்ட கூட்டுக் கதையைப் பற்றியதாகவும் இருக்கலாம். இந்த உட்கதைகள் மூலக்கதைகளுக்குப் பக்கபலமாக அல்லது அதன் மையத்தை நோக்கிச் செல்வனவாகவும் அமையும்" என்று கதைப்பாடலுக்கு நீண்டதொரு வரையறையைச் சு. சண்முகசுந்தரம் அவர்கள் வரையறுக்கிறார். எவ்வாறெனினும், கதைப்பாடல் என்பது குறிப்பிட்டதொரு பண்பாட்டில் வாய்மொழியாகவோ ஒரு பாடகனோ அல்லது ஒரு குழுவினரோ சேர்ந்தோ தனித்தோ, இசையுடனோ இசை இல்லாமலோ, நிகழ்த்திய அல்லது நிகழ்த்துகின்ற கதை தழுவிய பாடல் கதைப்பாடல் ஆகும்.

## சூழலின் இன்றியமையாமை

கணியான் கூத்துக் கதைப்பாடலின் வாயிலாக நாட்டுப்புற மக்கள் தங்கள் பிணி தீரவும், வாட்டம் நீங்கவும், தொழில் சிறக்கவும், துன்பம் தொலையவும், திருமணம், குழந்தைப் பேறு எனப் பல்வேறு நற்காரியங்கள் வீட்டில் நடைபெறவும் தாங்கள் வழிபடக்கூடிய தெய்வங்கள் அதற்கு உற்ற துணையாக இருந்து வழிநடத்திச் செல்லக் கணியான் கூத்தை நடத்துகின்றனர். அவ்வாறு தெய்வ வழிபாடு செய்வதைச் சிவனணைஞ்ச பெருமாள் கதைப்பாடல் பின்வருமாறு கூறுகிறது.

"பரமசிவன் எந்தனுக்கு உன்னிடத்தில்

பூசைகொள்ள உடையவனார் வரமுந்தந்தார்

வந்திருந்து உன்னிடத்தில்

வாய்த்த நல்ல கினாவுசொன்னேன்

கோவில் வைத்து குடிநிறுத்தி

குருபூசை நடத்தவேணும்." (Sivananainja Perumal Kathaipaadal, 1964)

இவ்வாறு நாட்டுப்புறங்களில் வழங்கப்படும் கதைப்பாடல்கள் தெய்வ வழிபாட்டுச் சூழலிலேயே எடுத்துரைக்கப்பட்டு நிகழ்த்தப்படுகின்றன. அந்தச் சூழலிலேயே அவை உயிர்ப்பெற்று வாழ்கின்றன. இந்தச் சூழலை நீக்கிவிட்டு வழிபடுவதென்பது குறைபாடுடையதாகவே அமையும். இந்த வழிபாட்டுச் சூழலின் இன்றியமையாமையை வலியுறுத்தியும் மனதிலிருத்தியும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## தெய்வ வழிபாட்டுச் சூழல்

தெய்வ வழிபாட்டில் தெய்வங்களின் கதைகளை முதன்மைப்படுத்துவதே கணியான் கூத்துக் கலைஞர்கள் தெய்வ வழிபாட்டின்போது நிகழ்த்திக் காட்டும் பேயாட்டம், அம்மன் கூத்து, கைவெட்டு, நாக்குவெட்டு போன்ற நிகழ்வுகள் நாடகக் கூறுகள் மலிந்து காணப்படும் ஒரு சூழலாகும். எனவே, இவ்விழாவின்போது சடங்குகளைக் கதை நிகழ்ச்சியாகச் செய்து காட்டுவதும் கணியான் கூத்தின் ஒரு நோக்கமாகக் கொள்ளலாம்.

கணியான் கூத்துத் தெய்வங்களின் இயல்புகள் குறித்துப் பலரும் கூறியுள்ளனர். கணியான் இன மக்களுக்குச் சுடலைமாடன் மிக மிக இன்றியமையாத தெய்வமாகும். கணியான் என்ற சாதியினரால் மட்டுமே நிகழ்த்தப்பெறும் ஒரு கலையாகும். பிற சாதியினர் இக்கலையை நிகழ்த்துவதில்லை.

"கணியான் சாதியினர் தங்களைத் 'தெய்வக் கணியான்' என்ற அடைமொழியுடன் சொல்லிக் கொள்கின்றனர். தங்களின் பிறப்பு 'தெய்வப் பிறப்பு' என்பது அவர்களின் நம்பிக்கை. கணியான் பிறப்பைப் பற்றிய வில்லுப்பாட்டுக் கதையும் செவிவழிக் கதையும் கணியான் சாதியைக் கணியான் ஆட்டத்துடனும் சுடலைமாடன் என்ற தெய்வத்துடனும் இணைத்துப் பேசுகின்றன. சுடலைமாடன் கோவில் விழாக்களின் வழிபாட்டுக் கூறில் கணியானுக்கு உள்ள இடமும் மேற்குறித்த கருத்தை நிலைநாட்டுகின்றன" (Perumal, 1997).

இவ்வாறு சுடலைமாடன் கதைப்பாடலில் கணியான் சாதியினர் நிகழ்த்தக்கூடிய வழிபாட்டு முறைகளும் அவர்களின் தோற்றம் பற்றிய செய்திகளும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"தமிழகத்தில் தெய்வ வழிபாடு பரவலானது பல்லவர் காலத்தில்தான்" என்று தமது நூலில் குறிப்பிட்டுள்ளார் (Perumal 1997). மேலும், "கி.பி. பதினோராம் நூற்றாண்டில் உள்ள முதல் இராஜேந்திரனின் எண்ணாயிரம் கல்வெட்டும் அம்மன் வழிபாட்டிற்காக முதன்முதலில் தனிக்கோவில் ஏற்பட்டதைக் கூறுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார் (Perumal 1997). நாட்டுப்புறத் தெய்வங்கள் தீய சக்திகளிடம் இருந்தும் தங்களைக் காக்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் காணப்படுகின்றது. "நாட்டுப்புறத் தெய்வங்கள் என்பது ஒவ்வொரு கிராமத்துக்கும் என்று தனித் தெய்வங்கள் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கான ஒரு தெய்வம், தீய சக்திகளிடமிருந்தும் நோய்களிலிருந்து காத்திட ஒரு தெய்வம் என்று பல அடிப்படைக் காரணங்களைக் கொண்டு எண்ணிக்கையில் பரவலாக வழிபட்டு வருகின்றது. அவ்வாறு வழிபடும் நாட்டுப்புறத் தெய்வங்களில் பெண் தெய்வங்களே அதிகமாகக் காணப்படுகின்றன (Arivudainambi, 1998)".

## தெய்வ வழிபாட்டு முறை

கதைப்பாடல்களும் காப்பியங்களும் சமய வழிபாடுகளிலேயே தோற்றம் பெற்றன. சமயம் மற்றும் சடங்கு சார்ந்தே நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி, தூத்துக்குடி போன்ற தென்தமிழக மாவட்டங்களில் நாட்டார் தெய்வ வழிபாடுகளில் கணியான்கூத்து நிகழ்த்தப்படுகின்றன. கணியான் கூத்து வடிவில் பாடப்படும் கதைப்பாடல்கள் சமய வழிபாடுகளில் இன்றளவும் சிறப்புப் பெற்றுத் திகழ்வதற்கு அவற்றின் தோற்றமே காரணமாகலாம். கணியான் தோற்றத்தை வைத்துப் பார்க்கும்போது பல்வேறு செவிவழிச் செய்திகள் கிடைக்கப்பெறுகின்றன. கணியான் இனமக்கள் தங்கள் தெய்வத்தை வழிபடக்கூடிய முறையைச் சுடலைமாடன் கதைப்பாடல் வாயிலாக அறியலாம்.

"தித்திமி தித்திதிமிதிமி எனவே

செப்பமுடன் ஆடிவாடா

தெய்வக் கணியான்

மத்தளமும் மகுடமதைக் கொட்டியாடடா

வன்னமுள்ள பேய்முகத்தைக் கொட்டியாடடா

சுடலைமாடன் கண்டுமகிழ அடவு

முறையாக நின்று ஆடுகணியான் கல்லரி மகுடமொரு கனகமத்தளம் தத்தளாக்கு தித்தியென வைத்து ஆடடா" (Perumal, 1997).

என்ற பாடல் வாயிலாகச் சுடலை மாடன் தெய்வத்தைக் கணியான் இனமக்கள் வழிபடும் முறையை நாம் அறியலாம்.

## தெய்வ வழிபாட்டிடங்கள்

கணியான் கூத்து நிகழ்த்தும் மக்கள் தெய்வ வழிபாட்டிடங்களில்தான் சமயம் சார்ந்த சடங்கு முறைகளை நிகழ்த்துவர்.

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்

சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்

றிருமூன்று மரபின் கல்லொடு புணர" (Arunachalam, 1994)

என்று தொல்காப்பியம் நடுகல் அமைத்து வழிபட்டதைக் குறிப்பிடுகின்றது. இம்முறைதான் பின்னாளில் குலதெய்வ வழிபாடும், சிறுதெய்வ வழிபாடும் தமிழகத்தில் வருவதற்கு அச்சாணியாக இருந்திருக்கலாம் என்பது அறிஞர்களின் துணிபு. கணியான் கூத்திலும் சுடலைமாடனின் வழிபாட்டிடமும் இம்முறையில்தான் காணப்பெறுகிறது. மாடன் கோவில்களில் பெரும்பாலும் சிலைகள் காணப்படுவதில்லை. சிலைக்குப் பதிலாகச் செங்கல் மற்றும் மண்ணால் உயரமாகக் கட்டி, தலைப்பகுதியை மட்டும் தனியாகக் காட்டியிருப்பர். இதனைப் 'பீடம்' அல்லது 'பூடம்' என்று அழைப்பர். இந்தப் பீடமும் பெரும்பாலும் திறந்தவெளியிலேயே அமைக்கப்பட்டிருக்கும்.

## தெய்வ வழிபாடு வெளிப்படுத்தும் சமுதாயச் சூழல்

நாட்டுப்புற மக்களின் உயிர்நாடியாக விளங்கும் தெய்வ வழிபாடு தமிழர்களின் பண்பாட்டினைப் பறைசாற்றுவதாக உள்ளது. கணியான் இனமக்கள் தங்கள் வாழ்க்கையில் பல்வேறு நன்மைகளைப் பெறவும் மகிழ்ச்சியாக வாழவும் விரும்பினர். மழை பெய்யவும் கடல்கோள், புயல் போன்ற இயற்கைச் சீற்றங்கள் நேராமல் இருக்கவும் வழிபாட்டினை நிகழ்த்தினர். இத்தெய்வ வழிபாடானது சமுதாயப் பண்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. திருவிழாக் காலங்களில் தெய்வங்களைக் குறித்துப் பாடப்படும் பாடல்கள் தெய்வங்களின் வரலாற்றையும் அவர்களின் பெருமையையும் சமுதாயத்தில் அவற்றிற்கு உள்ள இன்றியமையாமையையும் அறிந்து கொள்ள உறுதுணையாக உள்ளன.

## முடிவுரை

தெய்வ வழிபாட்டின் ஒவ்வொரு முறைகளும் சூழல்களும் ஒவ்வொரு சிறப்புக்கூறுகளை வெளிப்படுத்துவனவான அமைந்துள்ளன. கணியான் இனமக்கள் கூத்து நிகழ்த்தித் தமது சுற்றத்தினருடன் தங்கள் வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்ளத் தெய்வத்தை வேண்டிக் கொள்கின்றனர். தெய்வங்களைச் சாதி, மத, பேதங் கடந்து அனைத்து மக்களும் வழிபட்டு வரும் சூழலையும் காண முடிகின்றது. மக்களிடையே ஓர் ஒற்றுமைகளையும் உளமார்ந்த அன்பையும், நல்லது செய்ய வேண்டும் என்ற நட்புணர்ச்சியையும் அல்லது செய்யின் அவலமே மிஞ்சும் என்ற அச்ச உணர்ச்சியையும் இத்தெய்வ வழிபாடுகள் ஏற்படுத்தியிருக்கின்றன என்ற கூற்று நினைவில் கொள்ளத்தக்கது.

## References


Arumugaperumal Nadar, (1977) sudalaimada swamy kathai, D. John Press, Chennai, India.

Arunachalam, M., (1994) Tholkappiyam Porulathikaram Agathinaiyiyal Urai Valam, Madurai Kamaraj University, Madurai, India.

Nataraja Pillai, (1948) Isakki Kadhai endra pazhakanallur Neelekadhai, Kalaomagal Company, Tirunelveli, India.

Perumal, A, K., (2016) Sadangil Karaindha Kalaigal, Kalachuvadu Publication, Nagercoil, India.

Ramachandran, Na., (2012) Kaniyan aattam, New Century Book House, Chennai, India.

Ramachandran, Na., (2015) Thudiyana Samigal, New Century Book House, Chennai, India.

Sakthivel, (1992) Ponnirathal Kadhaipadal, South Indian Folklore Society, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

### About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License